# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 642/9—1990 දෙසැම්බර් 27 වැනි බ්‍රහස්පතින්දා—1990.12.27

642/9 ஆம் இலக்கம்—1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ம் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. —பி. 21/78 II

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1989 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவோடு சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

திருமதி சீ. எஸ். கருணாரத்ன,
செயலாளர்.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1990. திசெம்பர், 27

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, பட்டவகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவக (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. 1985 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆம் தேதிய 394/9 ஆம் இலக்கம் கொண்ட அதி விசேட கசெற்றினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டு எப்பிரில் மாதம் 10 ஆம் தேதிய 83/7 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பட்டவகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக்கல்வி நிறுவகக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பந்தி, இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

"10. அதன் (1) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

(1) பின்வரும் பதவி வழி உறுப்பினர்கள், அதாவது—

(அ) பணிப்பாளர்;

(ஆ) உயர்கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர்;

(இ) சுகாதாரம் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர்;

(ஈ) போதனா வைத்தியசாலை எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர்;

(உ) நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர்;

(ஊ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர்;

(எ) சுகாதார சேவைகள் பணிப்பாளர் அதிபதி;

(ஏ) போதனா வைத்தியசாலைகள் பணிப்பாளர்;

(ஐ) மருத்துவச் சேவைகள் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அதிபதி;

(ஒ) இலங்கைக் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பீடாதிபதி;

(ஓ) இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பீடாதிபதி;

(ஔ) இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பீடாதிபதி;

(ஃ) இலங்கை றுகுண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பீடாதிபதி; அத்துடன்

(க) இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல்வைத்திய விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி.

(2) அதன் 2 (உ) என்னும் உட்பந்தியின் காப்புவாசகத்துக்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலமும் :—

ஆயின், அவ்வாறு நியமிக்கப்பட்டோருள் குறைந்தது ஐந்து உறுப்பினராவது மருத்துவ உயர்தொழில் உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்பட்டவராயிருத்தல் வேண்டும் என்பதுடன், உடன் முன்னர் நிறுவகத்தின் டணிப்பாளராக இருந்தவர் அவர்களில் ஒருவராகுதலும் வேண்டும்."

1-157/1

ச.வ.—பீ. 21/78 II

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1989 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

திருமதி சீ. எஸ். கருணாரத்ன,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1990. திசெம்பர், 27

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, பட்ட வகுப்புக்கு மேற்பட்ட கமத்தொழிற் கல்வி நிறுவக (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 1990 திசெம்பர் 28 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 68/11 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பட்டவகுப்புக்கு மேற்பட்ட கமத்தொழிற் கல்விநிறுவகக் கட்டளைச்சட்டத்தின் II ஆம் பந்தியானது அதனை (6) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

> "(6) முகாமைத்துவ சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து அமைச்சர் தீர்மானிக்கும், அத்தகைய ஊதியம் அல்லது படிகள் கொடுக்கப்படல் வேண்டும்."

01–157/2

---

ச.வ.—பி 21/78 II

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1989 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

திருமதி சீ. எஸ். கருணாரத்ன,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1990. திசெம்பர், 27

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, உண்ணாட்டு மருத்துவக்கல்வி நிறுவக (திருத்தக்) கட்டளைச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 1990 திசெம்பர் 28 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 67/11 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகக் கட்டளைச்சட்டத்தின் II ஆம் பந்தியானது, அதன் (6) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

> "(6) சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து அமைச்சர் தீர்மானிக்கும் அத்தகைய ஊதியம் அல்லது படிகள் கொடுக்கப்படல் வேண்டும்."

1-157/3

---

ச.வ.—பி 21/78 II

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழங்கள் சட்டம்**

1989 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

திருமதி சீ. எஸ். கருணாரத்ன,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1990. திசெம்பர், 27

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைசசட்டம், 1990 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பட்டவகுப்புக்கு மேற்பட்ட பாளி, பௌத்தக் கற்கை நிறுவக (திருத்தக்) கட்டளைச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 1990 திசெம்பர் 28 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 68/3 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பட்ட வகுப்புக்கு மேற்பட்ட பாளி, பௌத்தக் கற்கை நிறுவகக் கட்டளைச் சட்டத்தின் II ஆம் பந்தியானது, அதன் (6) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

> "(6) சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து அமைச்சர் தீர்மானிக்கும், அத்தகைய ஊதியம் அல்லது படிகள் கொடுக்கப்படல் வேண்டும்".

1-157/4

ச.வ.—பி. 21/78 II

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1989 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

திருமதி சீ. எஸ். கருணாரத்ன,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1990. திசெம்பர், 27

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, அழகியற் கல்வி நிறுவக (திருத்தக்) கட்டளைச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 68/4 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, அழகியற் கல்வி நிறுவக கட்டளைச்சட்டத்தின் II ஆம் பந்தியானது, அதன் (6) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(6) சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து அமைச்சர் தீர்மானிக்கும், அத்தகைய ஊதியம் அல்லது படிகள் கொடுக்கப்படல் வேண்டும்."

1-157/5

---

**1978 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1989 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, பல்கலைக்கழங்பள் (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

திருமதி சி. எஸ். கருணாரத்ன,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1990 திசெம்பர், 27.

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 1990 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, தொழிலாளர் கல்வி நிறுவக (திருத்தக்) கட்டளைச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆம் திகதிய 68/10 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் II ஆம் இலக்க தொழிலாளர் கல்வி நி. வக கட்டளைச்சட்டத்தின் 12 ஆம் பந்தியானது அதன் (5) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(5) ஆட்சிக்குழுவின் உறுப்பினர்களுக்கு நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து அமைச்சர் தீர்மானிக்கும், அத்தகைய ஊதியம் அல்லது படிகள் கொடுக்கப்படல் வேண்டும்."

1-157/6

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது